**அறனாயக பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 18 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 25 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் அறனாயக பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பண்டக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடங்கிய ரூபா 93,260 ஆன மின் பொருட்கள் இருப்பு மற்றும் ரூபா 1,223,524 பெறுமதியான ஏனைய பொருட்கள் இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சகல இருப்புக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மின் பொருட்கள் இருப்பு மற்றும் ஏனைய இருப்புக்களை கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடங்கிய ரூபா 296,435 பெறுமதியான கணனிகள், தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சகல இருப்புக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது இதைனை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய 07 கணக்கு | தொடர்புடைய மீதிகளின் | 2014 ஆண்டு முதல் நிலவிய ரூபா 180,534 ஆன |

| | | |
|---|---|---|
| விடயங்களின் மீதிக்ள மற்றும் துணை பதிவேடுகள்/அறிக்கைகள் இடையில் ரூபா 1,940,710 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசங்களை ஒப்பிட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வித்தியாசம் 2018 ஆண்டு இறுதியில் ரூபா 180,584 ஆனது.<br>ரூபா 330,619 ஆன முற்பண மீதி தொடர்பாக தகவல்களை கண்டறிய ஆவனங்கள் சபையிடம் இல்லாதால் தீர்க்க முடியாமலுள்ளது.<br>நானாவித வைப்பு மீதிகளுக்கு வீட்டுக் கூலி மற்றும் வாராந்த சந்தை பாதுகாப்பு வைப்பு உள்ளடங்காததனால் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.<br>2014 ஆண்டிற்கு முன் இருந்து நிலவிய ஊழியர் பிணை வைப்பு மீதியின் வித்தியாசத்தை மேலும் பரிசீலனை செய்து கண்டறிய நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) **தொங்கல் கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2001 ஆண்டிற்கு முன்னர் இருந்து நிலவிய ரூபா 631,350 ஆன தொங்கள் கணக்கின் மீதியினை தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேவையான சீராக்கம் செய்து தொங்கள் கணக்கை தீர்க்க வேண்டும். | இந்த மீதி தொடர்பாக தகவல்களை கண்டறிய தொடர்ப்புடைய ஆவனங்கள் சபையில் இல்லாதால் அம் மீதியை தீர்க்க முடியாது. |

**(ஈ)** **செலுத்த வேண்டிய கணக்ககள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 02 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 433,973 ஆனது. | செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | டெண்டர் வைப்பு மற்றும் வேலைகளுக்கான பெறுவனவுகளிலிருந்து ரூபா 32,514 மற்றும் நானாவித வைப்புகளிலிந்து ரூபா 5,672 தொகை மீள் செலுத்தப்பட்டுள்ளது.<br>பாதைகளிலுள்ள பிரச்சினையான நிலைமை காரணமாக மீள் செலுத்த முடியாத பணம் நிலவின. ஒப்பந்த பிணை வைப்பை மீள் செலுத்த முடியாததுடன் மீள் செலுத்த முடியாத முற்பணத்தை |

வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | 05 வருடங்களுக்கு ஒரு முறை செய்ய வேண்டிய வீத வரி மதிப்பீடு 2011 ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | புது மதிப்பீட்டினை செய்வதற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிருந்த போதும் இதுவரை செய்து தரப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,202,140 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,764,751 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,567,000 | 2,814,733 | 2 ,769,007 | 108 ,779 | 2 ,517,000 | 2 ,657,613 | 2 ,547,042 | 250 ,616 |
| (ii) | வாடகை | 2,642,600 | 1,924,885 | 1,923,273 | 321,130 | 1,925.800 | 1,849,730 | 1,730,190 | 364,816 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 360,100 | 367,352 | 367,353 | - | 355,500 | 455,935 | 455,936 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 53,992,700 | 59,720,198 | 34,183,434 | 32,773,354 | 45,008,760 | 44,085,000 | 27,392,125 | 28,482,031 |

### 2.2.2 வீத வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசம்பர் 31 திகதியன்று நிலுவை வீத வரி மீதி ரூபா 69,185 ஆனதுடன் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் அறவிடாமல் காணப்படும் மீதி ரூபா 12,653 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2011 மதிப்பீட்டில் உள்ளடங்காத ரூபா 12,653 ஆன வீத வரி மற்றும் குத்தகையினை பதிவழித்தலுக்கு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018 திசெம்பர் 31 திகதிக்கு உள்ள நிலுவையின் ரூபா 20,282 ஆன தொகை 2019 ஆண்டின் போது அறவிட்டுள்ளது. மேலும் 05 பிரச்சினைக்குரிய இடங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,695 தொகையை அறவிடுவதற்கு அல்லது விடுவிப்பதற்கும் எஞ்சிய தொகையை 2019 ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திப்பிட்டிய வாராந்த சந்தையின் 2002 மற்றும் 2004 ஆண்டுகளுக்காக ரூபா 55,672 ஆன வாடகை அறவிட வேண்டியதாக உள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடட நடவடிக்கை எடுக்க வேண்டும் | அறவிட முடியாத நிலையில் ரூபா 20,220 ஆன தொகை நிலவியதுடன் ஏனைய நிலுவை தொகை தொடர்பாக உளளூராட்ச்சி உதவி ஆணையாளரிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டை விஞ்சிய நிலுவை வீட்டுக் வாடகை ரூபா 247,058 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | அறனாயக்க பலநோக்கு கூட்டுறுவு சங்கத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,558 மற்றும் எஞ்சிய ரூபா 242,500 ஆன நிலுவை வீட்டு வாடகை தொடர்பாக சபை தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப ்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,417,125 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,910,526 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2019 ஆண்டின் போது நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 658,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,163,176 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளது. ரூபா 542,925 ஆன தொகையை பதிவேடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் இயற்கை பசளை உற்பத்திற்காக காணியொன்று கொள்வனவு செய்வதற்கு, வீத வரி பிரதேசங்கள் விருவுபடுத்த மற்றும் ஏக்கர் வரி திட்டமொன்று தயாரிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | (i) வீத வரி பிரதேசங்களை விரிவாக்கல், ஏக்கர் வரி திட்டமொன்று தயாரித்தலை எதிர்காலத்தில் மேற்கொள்கிறேன்.<br>(ii) இயற்கை பசளை கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க தெபத்கம தோட்டம் எனும் காணியின் 05 ஏக்கர்களின் அளவை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சுற்றாடல் பரிந்துரை வழங்கப்பட்டது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபையினால் துணைச்சட்டம் விதிக்கப்பட திட்டமிட்டிருந்த போதும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். | சில துணைச்சட்டங்களை எதிர்காலத்தில் விதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். கழிவு பொருட்கள் தொடர்பாக துணைச்சட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையினால் கழிவுப் பொருட்களை வெளியிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | முறையான கழிவு பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் முகாமை தொடர்பாக சபரகமுவ மாகாண சபையினால் வர்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட துணைச்சட்டம் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். இச் சபைக்கு குப்பை வெளியிட பொருத்தமான இடமொன்றை தேடிக் கொள்வது மிகக் கடினமாகவுள்ளது. இதன் காரணமாக 50 பர்சஸ் அளவான காணியொன்றை பெறுமளவு பணம் கொடுத்து குத்தகை அடிப்படையில் பெற்று அதில் கழிபு பொருட்கள் வெியிடப்படுகிறது. |

(இ) **சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மலசல கழிவுகளை வெளியிட சபைக்கு சொந்தமாக பொருத்தமான காணியொன்று இல்லாததனால் இட வசதி இல்லாத நகர்புற மக்களுக்கு அச் சேவையை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. | மக்களுக்கு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பிரதேச சபைக்கு சொந்தமாக மலசல கழிவுகளை வெளியிடப் பொருத்தமான காணியொன்று இல்லை. உரிய இடவசதி உள்ளவர்களுக்கு மாத்திரம் கலி செவை பெற்றுக் கொடுக்கப்படுகிறது. எதிர் காலத்தில் கலி அகற்றவதற்காக உரிய காணியொன்று கிடைத்ததன் பின்னர் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் சேவையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு 11 பதவிகளில் 13 வெற்றிடங்கள் மற்றும் ஓர் பதவியில் 2 ஊழியர் மிகையும் ஆனது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகையை முறையாக்குவதற்கு நடவடிககை எடுக்க வேண்டியமை. | வெற்றிடங்களை பூர்த்தி செய்ய சபைக்கு அதிகாரம் வழங்கப்படாத வாசிகசாலை பொருப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், சுகாதார பரிசோதகர், ஔடத கலவையாளர் மற்றும் சுடலை இயக்குனர் பதவிகளிற்காக மாதாந்தம் மற்றும் காலாண்டாக உள்ளூராட்ச் ஆணையாளர் மற்றும் பிரதான செயலாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகை பூரணமாகியுள்ளது. |

### 3.3 சொத்துக்கள் முகாமை

#### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடுகாடு பதிவேட்டின் படி 38 இடுகாடுகள் இருப்பதுடன் சபைக்கு சொந்தமான இடுகாடுகள் பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்வில்லை. | ஆய்வொன்றை மேற்கொண்டு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான இடுகாடுகள் பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு உரிய அளவை மற்றும் சுவீகரிப்பை மேற்கொள்ள மகா சபையை அறிவூட்டி ஏதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்கின்றேன். |

#### 3.3.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை அமைச்சிற்கு மற்றும் சபரகமுவ மாகா சபைக்கு சொந்தமான ரூபா 33,556,588 பெறுமதியான 8 வாகனங்கள் மற்றும் 4 லொறிகளை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வாகனங்களை சுவீகரிக்க தேவையான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அவ் விண்ணப்பங்களை கைச்சாத்திட்டு உரிய நிறுவனங்களிற்கு அனுப்பி கூடிய விரைவில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 18 ஆம் திகதி மாகாண சபை மற்றும் உள்ளூராட்ச்சி அமைச்சின் நகர எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 784,300 ஆன பிரேல் இயந்திரத்தை பயன்படுத்திருக்கவில்லை. | சொத்துக்களை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொலிதின் துண்டமாக்கும் பிரேல் இயந்திரத்தை பயன்படுத்தி செயற்பட இது வரை தேவைப்பாடு ஏற்படவில்லை. |
| (ஆ) | நீண்ட காலமாக செய்ற்படாதுள்ள ரூபா 5,055,698 பெறுமதியான மற்றும் 06 இயந்திரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க சபைக்கு இயலாமலிருந்தது. | பயன்படத்த முடியாதெனின் பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வாகனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பண்டக மென்மையாய்வு அறிக்கை பிரகாரம் ரூபா 40,000 பெறுமதியான பற்செயல் நடமாடும் அறை மற்றும் ரூபா 3,000 பெறுமதியான 3 வகை பண்டங்களிற்கான பொறுப்பான அலுவலர்களை இனங்கண்டு பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பற்செயல் நடமாடும் அறையிற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் நடமாடும் அறையை தயாரித்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 3,000 பெறுமதியான மூன்று பண்டங்களிற்காக பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பாதீனூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 28 செலவின விடயங்களின் ரூபா 1,627,120 ஆன ஒதுக்கீடு மொத்தமாகவும் 11 செலவின விடயங்களிற்கான ரூபா | நடைமுறை சாத்தியமான பாதீடு தயாரிக்க வேண்டும். | நாலாந்த சம்பளம், வெளிநாட்டு பயணச் செலவு, சட்டக் கட்டணம், கணக்காய்வுக் கட்டணம், பயிற்சிப் பாட நெறி, உள்ளூராட்சி வாரம், நலன்புர் கொடுப்பனவு, புகையிரத |

| | | |
|---|---|---|
| 920,538 ஆன ஒதுக்கீடு எஞ்சியுள்ளமை 80 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்குமிடையில் கூட்டுத்தொகை ரூபா 2,547,658 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | பருவச்சீட்டு கட்டணம், வழக்குக் கட்டணம், சுதந்திர புகையிரத அனுமதிப்பத்திர கட்டணம், ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு, வடிகால் பழுதுபார்த்தல் போன்ற செலவுகள் ஏற்படவில்லை. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் ஓர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்றுக்கூடல் நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்றுக்கூடல் நடாத்ததுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக முதல் ஒன்றுக்கூடல் 2019 மார்ச் 12 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய ஒன்றுக்கூடல் 2019 ஜுன் 11, செப்தம்பர் 19 மற்றும் திசெம்பர் 05 ஆம் திகதி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |